652

உ

முருகன் துணை.

ஏறல்மா நகரம் சேர்மன்

# ஸ்ரீமத் அருணாசல சுவாமிகள்

## தோத்திரக் கீர்த்தனை.

13 MAY 1922

இஃது

விருதுபட்டி

ஏறல் அருணஜல சுவாமிகள் பஜனாலயத் தலைவர்,

ச. அ. ஷண்முகநாடார்

எழுதியது.

ஷை யூர் ம-ள-ள-ஸ்ரீ

கொ. சி. பச்சைய நாடாரவர்களால்

அச்சியற்றியது.

---

சென்னை :

ஹாடென் அண்டு கம்பெனியில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

(காப்பிரைட் ரிஜிஸ்டர்)

[அணா 0—6—0

2:4198
N22
176034

# நற்சாக்ஷிக் கவி.

---

இது

சென்னை தண்டையார் பேட்டை

க்ஷத்திரிய மித்திரன்

பத்திராதிபர் ம-௱-௱-ஸ்ரீ,

த. விஜய துரைசாமி கிராமணியாரவர்களியற்றிய

அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கார்பூத்தபொழிற்சூழு மேறலரு ணைசலன்மேற்
கனிந்து கீர்த்னம்
சீர்பூத்த பாண்டியநா டதன்கணுறு விருதைநகர்
சிறக்க வாழ்வோன்
ஏர்பூத்த சந்திரகுல வத்திரிதன் கோத்திரநல்
லெழிலார் வேப்பந்
தார்பூத்த வரசகுல சண்முகவே ளெனுமாலோன்
றழுவி னனே.

---

உ

முருகன் துணை.

ஏறல்மா நகரம் சேர்மன்

# ஸ்ரீமத் அருணாசல சுவாமிகள்

## தோத்திரக் கீர்த்தனை.

13 MAY 1922

இஃது

விருதுபட்டி

ஏறல் அருணாஜல சுவாமிகள் பஜனாலயத் தலைவர்,

ச. அ. ஷண்முகநாடார்

எழுதியது.

ஷை யூர் ம-ா-ா-ஸ்ரீ

கொ. சி. பச்சைய நாடாரவர்களால்

அச்சியற்றியது.

சென்னை :

ஹாடென் அண்டு கம்பெனியில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

(காப்பிரைட் ரிஜிஸ்டர்)

இதன் விலை] [அணா 0—6—0

176034

13 MAY 1922
MADRAS

# விண்ணப்ப வியாசம்.

---

இந்தியத் தாயின் செந்தமிழ் மக்கள் நிறைந்த, தற்கால நாகரீக நவீனகத் தோற்றத்திற் கேற்றவாறு, கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழித் தானுமதுவாகப் பாவித்துத், தானுந் தன் பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலும் என்றபடி ஆசை என்னும் பேய்வாய்ப் பட்டுப் படிப்பின் மணமறியாப் பாமரரும் பாவலர் பட்டம் வகிக்க முன்வந்த இக்கால மாறு பாட்டின் கோலத்தை எடுத்துக்கூறப் பெருகி நிற்கும். எனினும் நற்றமிழறிந்த சற்குருவை யடுத்தா, நல்லுபதேசம் பெற்று தமிழோதும் பலனேற்று முன்வராமல், வித்வலக்ஷண வரன் முறை விடுத்து ஏனையோரின் பாட்டுகளைப் புரட்டித் தன் பெயரைத் திரட்டிப் புஸ்தகம் வெளிப்படுத்தும் தற்காலத் தமிழ்த் தாசர்களின் பெருமையைக் கண்ணாரக் காணும் என் மனமும் அவர்களைப் பின்பற்றி நின்று விட்டது. மனக் குரங் காட்டத்தை மட்டுப் படுத்தலரிது தானே!

நல்லாரைக் காண்பதவும் நன்றே என்றபடி சிறியேனது நற்சக வாசத்தின் பலனைச் சிறிது தமிழ்த் தேனருந்தும் பாக்கியம் கிடைக்கப்பெற்று, பாடலியற்றும் பான்மைக்கு முன்வந்து,இச்சிறுபுஸ்தகத்தைவெளிப்படுத்தினேன். குருவுபதேசப் பழக்கமும் தமிழ் நூற் பயிற்சியும், இலக்கண விலக்கிய ஆராய்ச்சியுமிலாது, அன்பென்னும் புத்தியைக் கொண்டு அறிவென்னும் வித்தையா லெழுதிய இப்புஸ்தகத்தில், எப்பிழை காணினும் பொறுத்துக் கொள்ளப் பெரியோர் பாதத்தைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

வித்வத் தன்மையை வெளிப்படுத்தவும் தமிழ்ப்புலமைப் பட்டந் தரிக்கவும் இப்புஸ்தக மெழுத முன்வரவில்லை. மேற்

கூறியபடி நற்பழக்க வாசத்தின் பலனால் ஏற்பட்ட சிறிது தமிழுபதேசத்தைக் கொண்டு, வீண் காலங் கடத்தாது, பகவத் தியானமாகவே பஜனாமிர்த பானஞ் செய்யும்போது தோன்றிய புக்தியுக்திக் கேற்ப ஒவ்வொரு பாடலாக எழுதி ஏனைய பிள்ளைகளிடங் கொடுத்துப் பஜனை செய்துவர நேரிட்ட சமயம், பதிப்பாசிரியரின் நன்முயற்சியால் பல பாடல்களையும் ஒன்று சேர்த்து அச்சுக்கோர்க்க நேர்ந்தது. புருஷலக்ஷணம் பெரிதெனினும், பூஷணாலங்கிருதம் வேண்டுமென்பது போல் இச்சிறு நூற் குழவியின் தேகாலங்கிருதமாக வித்வரத்தினங்களின் சாற்றுக் கவிகளையும் சேர்க்கப்பட்டது. எனவே எல்லா மதிந்த பெரியோர்கள் இச்சிறு நூலை மனமாறக் கைக்கொள்வர் என்றெண்ணுகிறேன்.

தற்கால நவீனகத்தோற்றத்தில் கண்கூடாகக் காணும் சகலஜன மன ரசிகமாகப் பலவித சித்து விளையாடல் செய்யும், ஏறல்மா நகரம் சேர்மன் ஸ்ரீமத் அருணாசல சுவாமிகளின் பாதபங்கயப் பத்திரமாக இந்நூல் பாடப்பெற்று அம்மகானின் பெருமை விளங்கும் பெயர் என்றென்றும் நின்றுலவ இந்நூலை ஷ சுவாமிகள் சந்நிதானத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். சுபம்.

ஏறல் அருணாஜல
சுவாமிகள்
பஜனாலயம்.
விருதுபட்டி

இங்ஙனம்:

க. அ. ஷண்முகன்.

# நற்சாக்ஷிக்கவிகள்.

இது

அருப்புக்கோட்டை

நாடார் குலமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான்

சூ. ஆ. முத்துநாடார் எழுதியது.

விருத்தம்.

கலியுகக் காக்ஷி தன்னிற்
கண்கண்ட தெய்வ மென்று
ஒலிவுறு மேறல் நின்ற
ஒருவனின் பாதம் போற்றி
ஜொலிதருஞ் பாடல் சொற்றான்
சொல்லகத் தியநூற் போன்று
வலிவுறுஞ் சண்முகன் பேர்
வாய்ந்தநற் புலவன் மாதோ.

---

இது

சென்னை சித்திரகவி

ஸ்ரீமான் சின்னப்ப செட்டியார்

மாணவர்

சே. எஸ். விநாயகமூர்த்தி செட்டியார் எழுதியது.

அறுசீராசிரிய விருத்தம்.

சித்தரெலாந் தொழுதேற்றச் சித்துவிளை
யாடல்செயுந் தேவன் மீது
சித்திமிகுஞ் சங்கீதச் செந்தமிழ்ப்பா
மாலைதந்தான் தேசம் போற்றும்

சத்திபெறும் விருதைநகர்ச் சான்ருேர்தன்
குலதிலகன் தருமநீதி
பத்திமுறை மாருத ஷண்முகனென்
கண்மணியாம் பாவலோனே.

---

இது
விருதுபட்டி ஸ்ரீமான்
பூ. மு. நாச்சியப்ப நாடார் எழுதியது.
(ஆ. வி.)

தருமமனு முறைபொருமை தமிழ்மகிமை சௌரியந்
தங்குந்தென் னிந்தியாவில்
தன்னிகரில் மன்னராம் பொன்மதுரை பாண்டியர்த்
தன்குல முதித்த வள்ளல்
அருமைபெறு ஞானவே தாந்தச் சமாதிநிலை
யாகிபல சித்து புரியும்
ஆறுலவு மேறல்நக ரருணசலக் குருவி
னர்ச்சனைப் பத்திர மெனும்
பெருமைசேர் தோத்திரக் கீர்த்தனப் பாமாலை
பேசினன் ஓசை பெறவே
பெரியவர்க் கன்பனுயர் சங்கீத கலைவாணன்
பேர்பெற்ற விருதை வாசன்
தருமகுண விரதநெறி சரசுவதி கருணைமிகு
சன்மார்க்க வித்வ ரத்னம்
ஷண்முகன் செந்தமிழ்ப் பண்முகன் என்னகச்
சண்முகக் கவி ராஜனே.

---

இது
உடுமலை ஸ்ரீமான் சரபகவி மாணவர்
**தமிழ் நாடக சங்கீத சாகித்ய உபாத்தியாயர்**
**சென்னை ச. சு. சங்கரலிங்க நாடார் எழுதியது.**
எழுசீராசிரிய விருத்தம்.

விண்முகம் வாய்ந்த தேவர்கள் தமக்கும்
வியப்புறுஞ் சித்தர்கள் முனிவர்
மண்முகஞ் சூழ்ந்த மாணவர் பலர்க்கும்
வரமருள் ஏறலின் கடவுள்
தண்முகப் பெருமை தனக்கொரு புதினத்
தமிழ்த்தரு மலரெனச் சாற்றுஞ்
சண்முகக் கவிஞன் கீர்த்தனைக் குவமைச்
சாற்றுதற் கரிதரி தம்மா.

---

இது
தென்னிந்தியா தமிழ்நாடகத் தலைமையாசிரியர்
**ஸ்ரீமான் டி. டி. சங்கரதாஸ் சுவாமி அவர்களின்**
**பிரதம மாணவர் சந்தச்சரப சங்கீத ராஜபார்ட்டு**
**ம-ா-ா-ஸ்ரீ எம். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை**
**அவர்களின் மாணவராகிய**
**ராஜமன்னார்குடி ஸி. ஆர். ராஜகோபால் நாயுடு**
**எழுதியது.**
அறுசீராசிரிய விருத்தம்.

நீர்மணக்கு மிவ்வுலகி னிலமணக்கச்
செந்தமிழே நிலைப்ப வேண்டி
கார்மணக்கு முகிலனைத்துங் கண்மணக்கு
மழையெனவே கண்டு வுள்ள

ஊர்மணக்கத் தோத்திரப்பா வுளமணக்க
விடுத்தானவ் வுண் மையனுல்
பேர்மணக்கு ஷண்முகனும் பெயர்மணக்கப்
பெற்றனைப் பெருமை என்னே.

---

## நூற்பயன்

### விருத்தம்.

சீர்கொண்ட விருதுமா நகரில்வாசன்
சிவசரவ ணனந்த முருகதாசன்
பார்கொண்ட பாண்டி மன்னவர் சுபுத்ரன்
பகரரிய சங்கீத ஜெகவிலாசன்
பேர்கொண்ட ஷண்முகக் கவிராஜனும்
பேசுமித் தோத்திரக் கீர்த்தனத்தின்
நேர்கொண்டு கற்ரோர் படிப்போரெலாம்
நீங்காத சுகமோங்கி வாழ்வர் மாதோ.

---

### பதிப்பாசிரியர் புகழ்ச்சி

### விருத்தம்.

பொன்னு மணியும் பூண்டொளிரும்
பூபன் தர்ம குண மகிபன்
சின்னக்கண்ணு நாட னருஞ்
செல்வப் புதல்வன் திருமருவும்
மன்னன் குபேரக் கன்னனெனும்
மகராஜன் பச்சைய னெங்கோன்
தென்னன் ஏறல் நகர்க் குருவின்
திருப்பா வளித்தான் ஜெகத்தினர்க்கே.

---

உ

முருகன் துணை.

ஏரல்மா நகரம் சேர்மன்

# ஸ்ரீமத் அருணாசல சுவாமிகள்

## தோத்திரக் கீர்த்தனம்.

### விநாயகர் துதி.

(வி. ம்.)

நலமருவும் ஏரல்நகர் நல்லருணா
சலமாலின் நவீன கத்தை
தலமருவுங் கீர்த்தனையாற் றோத்தரிக்கத்
தமிழுதவித் தந்து காக்கும்
நிலமருவும் பாரதத்தைக் கோடொடித்து
நீள்வரையி லெழுதி வைத்த
பலமருவுங் கணபதிதன் னிருசரணப்
பரிமளமார் பதுமற் றாளே.

---

## அருணாசல சுவாமிகள்

### அலங்காரப்பதிகம்.

(ஆ. வி.)

வாதுசூ தென்னுமே தாகிலுஞ் செய்துசொல்
மாறித்தி ரிந்த துண்டோ

வம்பனென் பெயரையே அம்புவியில் கொண்டுபல
வஞ்சனை புரிந்த துண்டோ
மாதாபி தாசொல்லை வேதாந்த மென்று என்
மனமதிற் கொண்ட தன்றி
மதியாது நினதுபதம் துதியாது நின்றிலேன்
மாதவா யிதுதெ ரிந்தும்
பாதாரம் தருவதற் கேனோயி னுந்தடை
பாலன்மேல் கோப மாமோ
பஞ்சமா பாதகம் செய்தோருன் பதிவந்து
பாக்கியம் பெற்ற ரென்றே
ஆதாரம் பற்பலக் காதினிற் கேட்டுநான்
அணுகினேன் வரம தருள்வாய்
ஆறுசேர் மடுசூழு மேரல்மா நகர்வாழும்
அருணாச லேச மணியே.

---

## கீர்த்தனம்.

திருமால் மருமகனே—என்ற மெட்டு.

வருவாய் வரந்தருவாய்
அருள்புரிவாய் திருவுருவாய்—ஏரல்
வந்தமர்ந்த சுந்தரனே
இந்தவேளை எந்தன் முன்னே. (வரு)

ஒருநாளுனை மறந்தேன் இல்லை
வுருவே தொழு திருந்தேன்—எனக்
கோருதவி பார்தனிலே
தாருமெந்தன் நேர்தனிலே. (வரு)

தருமமுறை காட்டும் மனச்
சபலந்தனை யோட்டும்—உடல்

தாங்கிடும் குன்ம வியாதி
நீங்கிடச் செய்யும் கியாதி. (வரு)

அருணசல மணியே செழுங்
கனியே அன்ப ரணியே—எந்தன்
அத்தனே நினைத்துதிக்க
பக்தன் ஷண்முக னழைக்க. (வரு)

---

பாதிராத்திரி வேளையில்—என்றமெட்டு.

ஆறுலாவிய ஏரல்மா நக
ராலயம் தங்கி வாழும் அரு
ணசலா வெந்த நாளும் வுந்த
னன்பனென் முறை கேளும் துணை
யாருமில்லை நான்கூறும் சொல்லை என்
ஆண்டவா கேட்டு ஆளும்
வாரணித்தட மார்பு நீள்மட
மாதரே விடும் அம்பு—வந்து
மண்டைக் கேறியே வம்பு—செய்யு
மாயமீதென்ன துன்பு இதை
மாற்றியே வரஞ்சாற்றுவா யிந்த
மைந்தன்மீதில் வைத்தன்பு
தேசத்தோர்வந்து பூசை சூடியுன்
சேவை பார்த்திட ஆகி உற்ற
தீவினையான வியாதி முற்றுங்
தீர்த்தருள் தருங்கியாதி பெற்ற
தேவனே அருணசலேசனே
செப்புவாய் ஞான நீதி

தாச தாசர்க்குமீசனே தாசன்
ஷண்முகன் துதிகேட்டு மனச்
சஞ்சலந்தனை யோட்டு உந்தன்
தாசரோடுறக்கூட்டு எங்கள்
சாமியே யிந்தபூமி மேற்புகழ்
தாங்கவே தமிழ்நாட்டு

---

இன்னும் வர்ம மேனையா என்றமெட்டு.

ஏது இந்தவாதையா—ஏழைமீதையா
யிந்த யேழைமீதையா
யீதழகல்லவந்து—என்னையாளையா (ஏ)
காதுனக் கென்னமந்தம் காப்பதுன் சொந்தம்
என்னை காப்பதுன் சொந்தம்
ஆதாரம் தருமரு ணசலானந்தம் (ஏ)
ஓரம் வைத்திடலாமோ ஓலம் வீண்போமோ
எந்தன் ஓலம் வீண்போமோ
யேரல மர்ந்தவுமக் கிதழகாமோ (ஏ)
தாரணி மேல்விசாரம் தாளென பாரம்
சற்றுந் தாளென பாரம்
பார்புகழ் ஷண்முகன் பாடுமிந்நேரம் (ஏ)

---

மாதகி யிந்தமர்மம் செய்ததேனோ காதகி என்றமெட்டு.

ஆண்டவா கலி லோகமதிற் புகழ்பூண்டவா—நல்ல
அருந்தவகுண பொருந்திடும் மணம்
நிறைந்திடும் புகழ் சுரந்திடு மெங்கள் (ஆ)
திரு—தாண்டவம் ஆட தாவிவந்துன்னை மிக வேண்டி
யிந்த—தரணிமக்களின் குறையை யிக்கணம் [டும்
மறையபக்குவம் சரியாய் செய்திடும். (ஆ)

நாதனே எந்த நாளுமுனை பணிந்தேன் வேதனே
அரு—ணாசலா சுக யீசனே
ஜக நேசனே நதி வாசனே. எங்கள் (ஆ)

ஏதையா—இந்த வாதுபுரியும் வகை ஓதையா
உனை—யென்றும் நம்பிடும்—ஷண்முகன்
தமிழ்—னின்றுலவிட வந்தருள் தரும் (ஆ)

---

அசாபியார சலியாம்பே என்ற மெட்டு.

அதிமதுரத் தருணாசலீசனே சத்தம்ஸமே
வாரும் நிம்ஸமே
உயராரியர் வாசமே ஆளுவாய் நேசமே
அர்ச்சிக்க யேற்றதெய்வ பாசமே
மதி யோது முந்தனது நீதமே திரு
மார்பிலகு மேரல்நகர் போதமே யிந்த
மண்ணிலுன்னை யெண்ணிவந்தேன்
பொன்னிலகு முன்னதவினோதமே (அ)

மூலமுத்தாரமே மோனவிஸ்தாரமே
மூதாதாதை போற்றுமூர்த்தி காருமே
ஞானதீர்த்தம் தாருமே. (அ)

தரைமீது வந்த உயர் நாதமே தாசன்
ஷண்மூகன் பாடுந்தமிழ் சங்கீதமே பெரும்
சத்து சித்தானந்த முத்தே
புத்தி மெத்த தோணுமுயர் பாதமே
தானகிநேகா—தேனபிஷேகா
தாசர்களேற்றும் சாமியே ஈசா
இந்தபூமி மேல்வாசா (அ)

---

நிரந்தவாசனே என்றமெட்டு.

அருணசலேசனே (அரு)

பிரியாத நேசனே பேரின்ப வாசனே
பேருபகாரனே நன்னீதனே
நீதனே—வேதனே—கீதனே—நாதனே (அரு)

நதிக்கறை யூரனே நாதாந்த தீரனே
துதிக்குமென் றன்பமதைத் தீருமே
தீருமே—காருமே—வாருமே—வரந்தாருமே. (அ)

மாதவ யோகா மாசில் வைபோகா
தாசன் ஷண்முக னக்கா ராதியே
ஆதியே—நீதியே—சோதியே—விபூதியே (அ)

---

அம்மா மதுரை மீனாக்ஷி என்றமெட்டு.

கண்பா ரருணசல சாமி நற்
கருணைசெய்வாய் நேமி இப்பூமி
கவலை தீர்த்தவாமி
கலிவிலக்குஞ் சாமி. (க)

மண்மீதி லுன்னையன்றி வேறு இல்லை
மண திலெண்ணிப் பாரு நின்னொரு
வசன மின்பங்கூறு
வருத்தமதை தீரு (க)

பண்டான ஏரல்நகர் வாசா உயர்
பக்தர் துதிக்கும் நேசா விலாசா
பண்பாடினேன் ஈசா
பரிமள விஸ்வாசா

கண்டோர்க் கருள்புரியுங்கோனேஎனைத்
காப்பதுன் கடன் தானே. ஷண்முகன்
கவிக் கிசைந்த தேனே
கருணை தருங்கோனே (க)

---

பூவருந்திருவே என்ற மெட்டு.

துங்கமாமணியே ஏரல் தங்கு நற்கனியே
கெட்ட சூதர் காலனே நீத யாளனே
நாதகீதனே மாத போதனே. (து)
என்கலிதீரும் உயரின்பமே தாரும்
யிந்த யேழையை மறந்தாலு முன் திரு
தாளேயே ஒருக்காலுமறவேன் (து)
மனதிரங்கலையோ எனை மறப்பதுஞ்சரியோ
அபி மான நற்குண மான விற்பன
மோன் சிற்பர தான தற்பர (து)
தினகரமுகனே நினைத் தேடும் ஷண்முகனே
தினஞ்செந்தமிழ் மலர் கொண்டு நின்பதம்
நின்று போற்றிடத் தந்தருள் வரம் (து)

---

ஆண்டி பண்டாரம் என்ற மெட்டு.

ஏரல் பண்டாரம் உன்னை
கோரி வந்தேனே மலர் சூழ் (ஏ)
ஆறுலவுங் கரைதனிலே ஆற்றுமணல் மேடையிலே
நீறுலவு மேனியோடு நின்றாய் சமாதியிலே (ஏ)
தூண்டாமணி விளக்காய் தோன்றுஞ்சுடர்க்கொழுந்தே
ஆண்டருள்வாய் யிந்தவேளை ஐயனே மனதுகந்தே (ஏ)
பாத தரிசனத்தை பார்க்கவரு மானிடர்கள்
தீதகற்றி வரமருளும் சித்தர்கள் சிகாமணியே (ஏ)

தமிழ்மா மறைக்கரசே ஷண்முகன் கவிமுரசே
எமையாளவே வருவாய் இகபரஞானக் குரிசே (ரே)

---

அய்யா பழனிமலை வேலா என்றமெட்டு.

எய்யாத பாழும் சமுசாரக் கடல்
எப்படி தாண்டுவது நேரே
பொய்யான வாழ்க்கை இதுபாரே கணப்
பொழுதில் போகும் எனைகாரே (எய்)
மெய்யான தெய்வமென்று நானே வந்து
வணங்கினே னுந்தனையே கோனே
அய்யா அய்யா வெனத்தானே நின்று
அழைத்தேன் னருணாசலத்தேனே (எய்)
பெண்டுபிள்ளை யென்பதனைப்பார்த்து ஆசை
கொண்டுமே நாளுக்கு நாளாய் வேர்த்து
மண்டை யுள்ளமட்டும் பணம் சேர்த்து பின்
மடிவதி லென்ன அதை கார்த்து (எய்)
தண்ணார் திருமருவும் பூவே தாசன்
ஷண்முகன் தமிக்கருள் கோவே
மண்ணோர் துதிக்கவரும் தேவே எந்த
மானவர் தமக்கும் பிதாவே (எய்)

---

காக்ஷி கண்காக்ஷியே என்றமெட்டு.

பாதார விந்தமே
பக்கமென் சொந்தமே (பா)
நீதா விநோதா வருணாசல போதா உந்தன் (பா)
காதாரக்கேட்டுவந்து கண்டேனுந்தன் காக்ஷியே
கருணைப்பிர வாகமே யென்கவலை தீர்ப்பாய் ஆக்ஷியே
மாதாபி தாவென்றுன்னை மன்னிவந்தேன் மாக்ஷியே

மாதமொரு தேதிதனில் கோடி யான
மானிடர்கள் தேடி வந்து கூடி நதி
மீதினிலே யாவரும் நீராடி தமிழ்க்
கீதமதை நாவதனால் பாடி
கேட்டவரம் தந்து
கிருபைகள் புரிந்து
நாட்டமுடன் வந்து
நலமருளு முந்தன் (பாதா)

ஆருஞ்சதமல்ல யிந்த நேரமதில் வாருமே
ஆரதி வாருன்பெருமை பூரண சொரூபமே
யேரல்தனில் நின்றவா யிவ்வேளை வரம் தாருமே
இல்லை யெனத்தந்த உந்தன் பூர்த்தி உல
கெங்கும் பரவிய புகழ் கீர்த்தி பெற்ற
நல்ல குணவல்ல திரு மூர்த்தி விருதை
நாவலன் ஷண்முகன் தமிழ்க் கீர்த்தி
நானிலம் கொண்டாட
நாளு முனைப்பாட
மானிடர்கள் தேட
வரமருள் விசேட (பாதா)

---

பூமிமெச்சிடும் என்ற மெட்டு.

பூசை யேபுரிய நேசமான வருணாசலா
உயர்—மாசிலா தவப்பூதலா—உனை
போற்றி நின்று வரம் கேட்ட யென் பால்
அருள் வாதிலா—துதா—சீதளா
ஆசையேவி பொருளாசை தாவிகையின்
காசியை—செல்லும்
வேசிய—ரான
தாசியை—நினைக்

காத சிந்தைதனை யோதுவாய் நீ வந்து
பூஜையை—மோன—வாசியை
காணவேணு மென்று நானுமுன்னைத் தேடி
வந்தனே—ஆசை
கொண்டேனே—பேசி
நின்றனே—யிந்த
காலமீதில் வந்து ஆளுவாயே நின்று
அண்டனே—நானுன்—தொண்டனே
வானுலாவும் சோலையான ஏரலாற்றி
னேரமே—வந்த
சாரமே—யென்வி
சாரமே—தீர்க்க
வாரும் ஷண்முகதாசன் கூறும் செந்தமிழின்.
தீரமே—சவீஸ்—தாரமே

ஆவோ கனியாம் என்ற மெட்டு.

ஞான குருவே—நம்பினேன் கற்பகத் தருவே
மோன உருவே—முனிவர்களேற்று மருவே (ஞான)
புவனமீதினில் ஞாயம்
புரிவதாக நேயம்
போற்றினேன் தாசகாயம் (ஞான)
கருணாகரவு தாரா
அருணாசலேசா—எனை
ஆளுவாய் பிரகாசா (ஞான)
திரு வார்ந்தபதி யெனும்
விருதூரில் மேவும்
விரதஷண்முகனை காக்கும் (ஞான)

பாலாபிஷேக என்ற—மெட்டு.

தேனுபிஷேகஞ் சிறந்த மகாகுண
சிரோங்குமேறல் அருணுசலம்
வானுதி தேவர்க்குந் தானுதியே நின்
மாபதம் போற்றத்தருமே நலம் (தே)
மானுர் தருமையல்மேல் நாடுமென்மனதாசை மாற்றி
ஞானே தயந்தந்து வாழ்விக்குமுன் நின்று மாலைசூட்டி
மன மதில் கனிவொடு துதிபுரிந்தேனே
தனமொடுகுணமது தருங்கனவானே
மான் மழுவேந்தியே வான் பிறைசூடும்
மாதவனே திருமாமகள் நாடும் (தே)
பேயென்னும் நோயுற்ற பெண்களெல்லா முந்தன்
கோயிலின் சன்னதியுர யோடிடும் பேய்கள் நொந்து
கொடிய பிணியணியு முடலை யுடையமாந்தர்
கடிய வினையகல அருளுமகிமை வேந்தா
கோடா கோடிஜன மேற்றிடும் சித்தா
தேடா தோடிவரும் தேவனேகர்த்தா (தே)
சாலோக சாமீப சாரூப பதவிதரும்.
மேலான நூலோர்கள் விரும்பியே கூறும்
விதன மழியவர மிகு திதரு பவனே
வதன மிலகு முயரழகு பொழியவனே
வேத மிகுந்த விருதூர் விலாசன்
சாது மகா சங்க ஷண்முக தாசன் (தே)

---

மெல்லிடை அல்லிதனை என்ற மெட்டு

ஏரலாதி பதி ஞானி—புக
ழேறும் நீறணியுமேனி

சீருலாவுந்தவ தியானி—உயர்
தேவலோக மரு ளேணி
திகழ் நிதி யின் தோணி
சிறந்த கலைக் யானி—உனை
தேடுங் கோடிஜனக் காணி (ஏ)

ஆடி மாத அமாவாசை—தனில்
ஆடியோடும் பேய்களோசை
ஓடி புவனமெங்கும் வீச—தேவர்
ஓவென்றலரி மனங்கூச
உன்மகிமை நேச
முணரவருள் ராஜ—சுக
மூட்டு மருணு சலயீச (ஏ)

பூரணு புலமைத் தருவே—மறை
போற்றும் ஞான தவக்குருவே
காரணு கருணை யுருவே—ஷண்முகன்
கவிக்கிசைந்த தமிழுருவே
கனகமணித் திருவே கருணைதருமதிவே—கடைக்
கண்பார் செழிய தமிழ்க்கருவே (ஏ)

---

வண்ணதினைமாவை தெள்ளியே என்றமெட்டு.

மண்ணுலகோர் தவபுண்ணியா—ஏரல்
மாநகர் தங்கிடும் கண்ணியா—தெய்வ
வாசம் நிறைந்தலா வண்ணியா—உயர்
மலை மாநதி பொழிமேலதி
வளர் மாமதி யழகாததி
வாரு மெனையாள மாதவா என்மேல்
வாஞ்சை வைத்தாளுமதீதவா. (ம)

வண்ணத் திருக்கோவில் நீட்டமே—புவி
மாதர்கள் வந்திடுங் கூட்டமே—உடல்
வாதையுற்றுப் பேய்களாட்டமே—ஓட
வரமே தருமருணுசல
மணியே மனங்களிவாயருள்
மாக்ஷி மையுற்றிடும் காக்ஷியா—ஏர
லாக்ஷியை பெற்றிடும் சூட்சியா (ம)

பண்ணத்துதி சேவை பாரிலே—தரும்
பாகுள்ள அன்பர்கள் நேரிலே சந்தம்
பாடினேன் வந்துனின் பேரிலே—விருதை
பதிஷண்முகன் துதிசெய்திடும்
மதி நின்றருள் நதிதந்திடும்
பாண்டிக் கணிகல ஞானமே—தேடும்
ஆண்டிக்கருள் தருமோனமே

---

நைனேசமார என்றமெட்டில் பின் சந்தம்.

ஆழி சூழ்புவி அன்பனே இன்பனே நண்பனே பண்பனே
தாளினை பணிந்தேன் தமிழ்மாமலர் சொறிந்தேன்
தாரிலுனை நினைந்தேன் சாகசமேன் வாரும்
சாதிப்பதிலாவக் கடையே திப்பொழுதே யற்புத (ஆழி)

மாசிலாமணியே மாதவக்கனியே
வாசமாரணியே வாவிசூழேரல்
வாசனே பூசனே நேசனே யீசனே (ஆழி)

நாதனேவா வருணுசலனே குரு
நாயகா தாதிரு மாமலர் தாள் தனே
நத்தினேன் கிட்டினேன் பற்றினேன் முற்றிலும் (ஆழி)

தாச விலாசா சற்குரு நாதா
சான்றோர்கள் நேசா தாணுவே விருதை
ஷண்முகன் செந்தமிழ் வந்த மாசுந்தர (ஆழி)

---

இனியென்ன செய்குவேன் என்றமெட்டு.

பல்லவி.

அடுத்த பலனைத்தும் விடுத்து செலவுன்பதம்
பிடித்தும் அருள் கொடுக்க வருத்த மென்ன (அ)

அநுபல்லவி.

நடத்தை தவரும் சொல்லை நான்படித்தது மில்லை
கடுத்த முகத்தைக் காட்டிகனத்து பேசவும் இல்லை
காருமோன விலாசனேசனே
வாருமே வருணாசலேசனே (அ)

சரணம்.

கொடிது கொடிது பொல்லா வருமைகொடிது வென்றும்
கூறுஞ்சொல்லை நான் கேட்டுகோறி வந்தேனே யின்றும்
இடையில் வருகு மெமன் பிடிவாரண்டு மகல
ஏரல் தனக்கு வந்து தீரப்பாவென நின்று
வெத்தனை தரம் அத்த னென்றுமே
பக்தியோடுனை நத்திடும் யெனை (அ)

தருமபந்தி போஜனம் தழைக்குதே உன்னகர்
தனமுங் குணமும் ஞானம் தங்கும தற்குநிகர்
தரணியில் கண்டிலேன் அருணாசலா உந்தன்
தஞ்சமையா கொஞ்சம் நெஞ்ச மிரங்குவாய் வஞ்சம்
தன்னையே கெடு உன்னருள் கொடு
ஷண்முகன் றன்மேல் வன்ம மேன்விடு (அ)

---

சோட சோட மோரியம்பியா என்றமெட்டு.

எர லதிபதி யருணசலா
அருள்மா முதலா (எரலி)
மதுவனஞ் சோலை கமழ்
மயிலினம் பாடும்புகழ்
மன்ன வண்ண அண்ண முன்னுல்
வாரும் காரும் சீருந்தவமுய (ரதி)
சுரர் தவமுது மறைசுகுண உணர்ந்து திக்த
சுத்த முற்று வித்தை கிட்ட
சோணையான ஞான மோனந்தரு (மதி)
மலை யென்னும் குடமுலை விலை மகளிடு மயல்
வந்து நின்று சிந்தை வென்று
வாட்டு தேற்ற மாற்ற மருந்துதா (அதி)
தனையன் ஷண்முகன் தமிழ் உணமிக தொழுவருள்
தங்க நன்கு பொங்க யிங்கு
தாம தமி லாது வர மருள் (அதி)

---

சஞ்சலமாய் நெஞ்ச மிக என்றமெட்டில் பின் மகுடம்.

அண்டரமு துண்ட தவபதியோனே புவி
வண்டர் மிக தொண்டு செயு மதியோனே இங்கு
அஞ்சலெலன ஓடிவந்து சஞ்சலங்கள் தன்னை
வென்று நெஞ்சினி லமர்ந்திருந்து தஞ்சமே
தாராய் (அ)
தந்தையென வந்த குருபரதேசி ஞான
மந்திர மொழிந்த நல்லசுகவாசி திகழ்
சந்தன சோலைபலாவும் அந்தர மங்கையுலாவும்
சுந்தர பேடு குலாவும் விந்தை ஏரலா (த)

176034
O2:4198
N22

இம்மை தனிலம்மாவாசை எனுந்தேதி தனில்
உன்மகிமை செம்மையுடன் தரும்பதி நல்ல
யெம்பெருமா னெந்தநாளும் கும்பிடு மெந்தனை
ஆளும் நம்பிடுமென் முறைகேளும்
வம்பிலாமலே (இம்)

பொங்குதவ துங்கமுது பொழிவோனே மட
மங்கைகளின் தன் குறையை களைவோனே உயர்
பொன் விருதை மேவிவளர் ஷண்முகனின்
பாவிலமர் புண்ணிய வானென்று
பலர் சொன்ன சுந்தரா (பொ)

---

நந்தாபிர மன்றனையீன்ற என்றமெட்டு.

செந்தாமரை தோன்றிடு மேரலில்
வந்தாயருணசல மாதவ
நந்தாவரந் தந்தருள் நற்றவனே நலமிகுமா
சந்தா யெமைபாண்டருள் கொற்றவனே தவ
சித்தனே உயர்கர்த்தனே திரு
தேவாதிகள் பூசித சுந்தரனே என
திடர்மலை பொடிபட வரமருளிய குரு
மூவா முதலாகிய மந்திரனே. (செந்)
செந்தூர் நகர் தங்கியவோர் மக
ளெந்தா யுன்பதந்தனை நாடிட
சிந்தாகுலம் தீர்த்த சிகாமணியே ஷண்முகனெதிர்
வந்தே வரந்தந்த செழுங்கனியே பதந்
தேடியாடி வருங்கோடி யானபேய்ச்
சித்தந்திகழ் இத்தரை மாஜனமே துயர்
தீர்த்து காத்தருளு மூர்த்தியே நினது
சித்தந் தருவாயிது நற்றினமே.

---

அனுமந்தா என்றமெட்டு.

அரும் பொன்னே அரும்பொன்னே யெங்க
ளத்தாவருணாசல சித்தாபுவி மகிழும் (அ)
இரும்போ உன்மனது யேனிந்த வாது
விரும்பு மெனது தவம் நிரம்பி யருள் பொழியும் (அ)
சாதுக்கள் வாசா சாமியே யீசா
பாது கார்ப்பது உந்தன் பாரமே நேசா (அ)
புண்ணியபூவே புனிதமெய் குருவே
ஷண்முகன் தமிழ் மலர் சங்கீதமருவே (அனு)

---

மீனாக்ஷிரமண என்றமெட்டு.

தேனாரும் பூங்கமழ்
தேவனே வாவா மலர்த் (தே)
ஏனோயிவ்வாது தானுமோ சூது
இத்தரை யேற்றிடுஞ் சித்தர்கள் போற்றிடும்
பக்தி கொடுத்திடும் சித்தி மிகுத்திடுந் (தே)
கன்மவினை என்னுங் குன்மவலி பண்ணும்
கபட மகலவழி பகருமினிய மொழி
சபல மிலகுகலி யுலக மிதனிலதி (தே)
அருணாசலேசா பரலோக வாசா
அன்பன் ஷண்முக னின்பம் பொங்கிட
சந்தச் சந்தமி லங்கும் செந்தமிழ்த் (தே)

---

இ. ம். பூரிகல்யாணி தாளம் ரூபகம்.

பல்லவி.

ஏரலாதிபனே அருணாசலேசனே (ஏர)

அநுபல்லவி

பாரவினேதனே பாரோர்க்க நீதனே
பக்திவைத்த உத்தமர்க்கு
சித்தியைக் கொடுத்து நிற்கு மேர

சரணம்.

ஏதுந் தெரியேனுன் பாதங்கதி என்று
எண்ணியே என்மனம் பண்ணும் பூசை நின்று
ஏதந்தனைவென்று ஓதுந் துதிகொண்டு
இருளற யெனதகமேவி
அருளது தருமொருசாமி ஏர
தேகம் கொடுத்த நீ யோகம் கொடுத்திடச்
சித்த மிரங்காத குற்றமுண்டோ யிந்த
ஆகஞ் சாதிப்பது மாகுமோவையனே
அஷ்ட சித்தி யுற்ற சித்தர்
நித்த நித்த நிஷ்டை பெற்ற ஏர
வாயாரச் சொல்லலாகாது பேயாட்டமும்
வாச மலரணி மாதர்கள் கூட்டமும்
மாயா வினேதக் காட்டேரிக ளோட்டமும்
வந்துறு பிணிதனை நீக்கிடும்
ஷண்முகன்றமி ழது போற்றிடும் ஏர

---

கழுகுமலைக்கு நாம் நேராய் என்றமெட்டு.

பல்லவி.

ஏரல் நகர் செல்வோம் வாரீர் நம
தீஸ்வரனுமரு ணுசலனைப் போற்ற ஏர

உபபல்லவி (சந்தத் தொடர்)

எதிர்த்தவல் வினையோட்டிடு
மிகுத்த நல் வழி காட்டிடு மே
எண்ணித்துதி பண்ணக் கலி
மண்ணிற்கெட நண்ணிச்செயு மே
இனித்திடச் சந்த மெடுத்து படித்து
மனத்துட நின்று துதித்து பெருக்க (எ)
எங்கணு மிங்கித முந்திய
விந்தை நிரம்பி விளங்கிய யே
இருளற் றிடபொற் கழலைப்
பணியத் திருவுற் றிடுநல் (லே)

சரணம்.

எண்ணிடார் தம்மனம் புண்பட்டு நொந்திட
என்றுந்தனன் பர்க்கு இன்பங்கள் தந்திட
ஷண்முகன் சங்கீதந் தன் பங்கில் நின்றிடத்
தன்றுதி எங்குந் தழைந்து வளர்ந்திட
தரணியி லுதித்த விலாசன்
தரிசனமருள் விசுவாசன்
தரித்திரம் விலக்கி நல் வாசந்
தருமருணசல யீசன் எ

---

செந்தமிழுலகினில் என்றமெட்டு.

(மகுடச் சந்தம்)

பாரெல்லாம் போற்றுமரு ணசலரைத்து திக்க
ஏரல்பதி சென்றிடுவோம் நமது துயர்
நேரில் சொல்லி வென்றிடுவோம் நல்ல
பற்றுடையோர் சித்தமதைப்
பற்றி நின்று புத்ரனீயும் எ

பரசுக மிதுவென வருமடிய வருளம்
பரவிய குறைதனை சிறை செயுந்திருவுளம் எ
பட்டுக் கெட்டிடும் பலபிணி மனிதரு
மிஷ்டப்பட்டிட வினிதுட னெதிர்வரும் எ
பண்டுவிண்டு அண்டர் பலர்
தொண்டு கொண்டு நின்று வளர் எ
பாசம் வைக்கு மருணாசலே சர்தம்
நேசம் வைத்து நற்பூசை சூடநம்
தோஷம் விட்டொரு காதமோடி சந்
தோஷ மணுகிடும் துன்பம் விலகிடும்
பார்புகழ் ஷண்முக நேர்முகம் வந்தொரு
பேரருள் தந்திடு மோர்குரு நின்றிடு (மே)

---

கல்யாணம் செய்துவையுமே என்றமெட்டு.

இன்னும் பாரமுகமாமா
என்மேல் வர்மமா இ
அன்னை தந்தை குரு தெய்வமும் நீயே
அன்றி வேறு துணையார் புகல்வாயே
கன்ம மகற்றக் கலியுகத் துதித்தாயே
கருணை செய்யிது தருணமுன் சேயே இ
ஆறுலாவு மேறல்மாநகர் வாசா
ஆதியான வருணாசல யீசா
கூறும் பக்தர் குறை தீர்க்கும் விலாசா
குருபரனென வெந்தன் மனதமர் நேசா இ
சாமியுன் தாமரைப் பாதங் கொண்டாடி
ஷண்முக தாசன் சங்கீதங்கள் பாடி
தாமதமின்றி யுன்னாலயம் தேடி
தஞ்ச மெனறேன் வரந்தந்தருள் நாடி இ

---

வாழ்த்து விருத்தம்.

அருணாசலேசன் வாழ்க
அடியவர் பலரும் வாழ்க
திருவார்ந்த யேறல் வாழ்க
செந்தமிழ் வேதம் வாழ்க
தருசுடரிரண்டும் வாழ்க
ஜார்ஜு ராஜேந்ரன் வாழ்க
குருபரன் வாழ்க நாடார்
குலமெலாம் வாழ்க மாதோ

ஸ்ரீமத் சேர்மன் அருணாசல சுவாமிகள் தோத்திரக் கீர்த்தனை முற்றிற்று.

---

## தனிப்பாட்டுகள்.

### சென்னை ச. சு. சங்கரலிங்க நாடார் எழுதியது.

நாடார் மகாஜன சங்கம்

ஏழாவது கான்பரேன்ஸ்

வாழ்த்துப்பா.

செந்தமிழுலகினில் என்றமெட்டு.

நீடாழி சூழுலகில் வாடாப் புகழ்படைத்த
நாடார் மகாஜன சங்கம்—நிலவுந் தமிழ்
பேடார் பாண்டியர் பிரசங்கம் நல
நிதியு மடியவர்கள் துதியு மிலகுமொரு
மதுரை நகரரசு புரியுமதிபதிகள்
நேர்த்திக் கிசைந்த நேசனே—சங்கரலிங்கன்
சாற்றுஞ் சங்கீத வாசனே.
தேசாபிமானி என்று ராஜாதி ராஜர் மெச்சுஞ்
சீரார் குபேந்ர நாமியே—சங்கம் ஸ்தாபித்த
பேரா ரத்தின சாமியே நல்ல

திருவருள் பெருகிய கலியுக மிதிலொரு
புதுமை எனமொழியு மசடர் மனமருள
சேர்த்தார் பாண்டியன் கீர்த்தியே—சாத்தூர் சங்கத்
பார்த்தார் பிஷப்பின் நேர்த்தியே (தில்)
தண்ணார் சந்திரவம்ஸ மன்னாதி மன்னரிவர்
தங்கும் பாண்டிய தேசமே வர்த்தகஸ்தான
மெங்குஞ் சிறந்த வாசமே சிவ
சமயமனு முறமை யதனை விரதமென
தகமையொடு நிதமு மனதில் நினையுமிவர்
சங்க மென்மேலும் வாழ்கவே பாரதிக்ருபை
தங்கும் நற்பெயர் சூழ்கவே.

---

மந்தித்தோப்பு ஸ்ரீமான் மணிகட்டி சுவாமிகள்

மகத்தும்.

துணிகட்டி யாடும் வெற்றித்
தொடைகட்டித் துலங்கும் தேவர்
அணிகட்டிக் கற்ப கப்பூ
வணைகட்டி வாழ்வ ரெ ாறுங்
கணிகட்டி மீதி லேறிக்
கவியின மோடுங் தோப்பு
மணிகட்டிச் சுவாமி திவ்ய
மலர்ப்பதம் வணங்கு வோரே

---

(ஓதிருநலலூர்வளரொய்யாரா என்றமெட்டு,
மாமதுரைப் பாண்டிநகர் கோப்பு கொண்டு
மங்களமிலங்கு மந்திதோப்பு தன்னில்
வாச மிகுந்திங்கள் குலக்காப்பு என்றும்
மா னிலமும் வானிலமுந்
தானிலகும் ஞானகுரு

மந்திரமார் சுந்தரனை நாடு மோன
மணிகட்டிச் சாமிபதம்பாடு (மாம)
நாதவிந்து மாமணியைக்கட்டி ஞான
நாதசிவ போதனை புகட்டி நிஷ்டை
நாடுமெங்கள் சாமி பதங்கிட்டி போற்ற
நலமிலகிய குருபரனருள்
வருமதிசுக முறுநிஜமிது
நாடர்குலக் கோமகனின் சாக்ஷி காண
நாடிவரும் ஞானிகளே சாக்ஷி.
தத்துவ மிகுத்தவருள் சேரும் கொடி
தானபல நோயது வுந்தீரும் வாலைத்
தாயருளுபாய மதாய்நேரும் தமிழ்ச்
சங்கமெலா மிங்கிதமார்
சந்தசுகா னந்தகவி
தானெழுதும் பாக்கியமுங்கூடும் சென்னை
சங்கரலிங்கன்றமிழ் கொண்டாடும். (மாம)

---

(ஜெயராம மூர்த்திக்கிணை-என்ற மெட்டு.)

வடி - வேலவனுக்கிணை யானதெய்வமிந்த
பூதல மேலுண்டோ (வடி)
ஆலமுண்ட அர னார்க்குபதேசித்து
ஆறுமுகத்தொளிர் சீலனே மயி
லேறு மகத்துவ மூலனே தமிழ்க்
கூறும் பக்தர்க்கனு கூலனே (வடி)
மால்மகளாம் வள்ளி மேல்மையலாகிய
பாலசுப்ரமண்ய ராஜனே நல்ல
பாலாபிஷேகவி லாசனே கவி
காலதெய்வம்முரு கேசனே (வடி)
சந்ததஞ் செந்தமிழ் சிந்திசை பாடிடுஞ்
சங்கரலிங்கன்ச காயனே உல
கெங்கும்புகழ் கார்த்தி கேயனே மலை
தங்கிவாழுந் தியாக ராயனே (வடி)

---

(தாஜராஜ தாஜராஜ-என்ற மெட்டு)

சொக்கநாதர் பக்கமேவுஞ் சுக்ஷி மீனுக்ஷி
வீர-சூரசம் மாரிசிங் காரிகெம் பீரி சுகந்தரி காமாக்ஷி
தக்கநாவலர் பாவலர் போற்றிடுந் தற்பரியே வாராய்
சதுர்மறை தனிலில கியமர கதமுக ஜகதாம்பிகை சீராய்
சங்கர லிங்கனு ளங்கமழ் சுந்தரிதனையனெனை காராய்
சாக்ஷியானபல மாக்ஷிமேவுநீ லாக்ஷிஎன்முகம்பாராய்
காக்ஷிதனைத்தாராய் போற்றிசெய்தேன்வாராய் (சொக்)

---

(ஆ சகிகாள் - என்ற மெட்டு)

காமாக்ஷியே
காத்தருள்வாய் பூத்தருள் சேர்
கஞ்சமலர்ப்பதம் தஞ்சமென்று வந்தேன் (கா)
பூமீதடியவர் போற்றுங் கிருபாகரி
பொங்குமலங்காரியே சங்கர
லிங்கன்தயாபரியே
காமியமகற்றியேஎம்மைக் காத்தருள்
காஞ்சிநகர் பெற்ற
காந்தி மிகுத்துற்ற (கா)

---

(இந்த வுடலை நம்பி - என்ற மெட்டு.)

பாலாபிஷேகப் பழனிமலை
பந்த பாசப் பிணிதன்னை தீர்க்குமலை (பா)
வேலாயுதன் தங்கி வாழுமலை
ஞான வேதம் படர்ந்து விளங்குமலை (பா)
காவடி யேந்திகொண் டாடுமலை
திருக் கார்த்திகை பாலனுக் கேற்றமலை (பா)
சாவடி தர்மந் தழைந்தமலை
தாசன் சங்கரலிங்கன் சங்கீதமலை (பா)

---

17634

# நற்சாக்ஷிக் கவி.

---

இது
சென்னை கிரிஸ்ட்டியன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ மஹாவித்துவான்
**வா. மஹாதேவ முதலியாரவர்கள்**
மாணாக்கர், சென்னை தண்டையார் பேட்டை
**ம. மாசிலாமணி கிராமணியாரவர்களியற்றிய**
அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கார்சிறக்கு மேறல்நகர் மேவுமரு ணாசலன்மேற்
கனியோ டொப்ப
தார்சிறக்கு மணிமார்ப னுடுபதிதன் குலத்துதித்துத்
தரணிக் கெல்லாம்
ஏர்சிறக்கு விருதைநகர் வாழுமொரு சண்முகனா
ணம வேலோன்
சீர்சிறக்கு கீர்த்தனையால் பாடல்வளஞ் சிறந்திடவே
செப்பி னானே.

---

# உங்கள் மனதுக் குகந்தது.

நாகரீகத்தில் சிறந்தது. நவீனகத்திற் கிசைந்தது.

## நாணயத்திற் கேற்றது.

சகலஜன மனரசிகமான, ஷரட், குடுதுணி, முதலிய அங்கிகளுக்கேற்ற தந்த (பட்டன்) போத்தான்கள் பலவித நூதன தினுசுகளில், உயர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்தது. உத்தர வாதமும் உண்மையும் நிறைந்தது. விலை விவரம், வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக் கெழுதிக் கொள்ளலாம்.

சாம்பில் வேண்டுமானால் 1—4—0 ரூபாவிற்கு வி. பி. மூலம் அனுப்பப்படும்.

**தி. மா. ஐயாவு நாடார் அண்டு கோ,**

ஜெனரல் மெர்ச்சண்ட்,

வண்ணாரப்பேட்டை, சென்னை.


---

Haddon & Co., Printers, Madras.